தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 24, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 7, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும் மலை வளமும் அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகிவரும் ஆற்று நீர் வளமும் வலிமை மிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கே.ஜி. பழனிசாமி கவுண்டர் அவர்கள் 8-2-2003 அன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஜி. பழனிசாமி கவுண்டர் அவர்கள் 1953-ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்று 1957 வரையிலும் மற்றும் 1957 முதல் 1962 வரையிலும் காங்கேயம் தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 7

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் வினா எண் *181*, திரு. டி. மணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

181—

கோயில் பராமரிப்பு

***8410—திரு. டி. மணி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி திருக்கோயில் பராமரிப்பின்றி பழுதுபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனைப் பராமரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

(இ) இக்கோயிலில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயிலில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது உபயதாரர்களை அணுகி, அவர்கள் மூலம்